நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச., அத்தியாயம் XXIII)
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

S.C.No. 61/2020

அ.த.சா:14 (LW–15 )சாட்சியின் சான்றுரை

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | பாலகுரு. | சாதி | : |
| தந்தை பெயர் | : | | தொழில் | : |
| கிராமம் | : | | மதம் | : |
| வட்டம் | : | | வயது | : |

04.07.2025 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.

---

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர், 4 முதல் 6 எதிரிகள் ஆஜர் இல்லை, 4 முதல் 6 எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச.பிரிவு–317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர். சாட்சி காவல் துறையினரால் அடையாளம் காட்டப்பட்டார்.)

சாட்சி இன்று அழைக்கப்பட்டு திரு.S.சுரேஷ், கிரேடு 3 பெஞ்ச் கிளார்க்(மாற்றுப்பணி) அவர்களால் உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

முதல் விசாரணை: தொடங்கப்பட்ட நேரம் : 12.34 பி.ப

நான் தற்பொழுது மதுரை மண்டலம் காவல் துறை தலைவர் அலுவலக தனிப்பிரிவு ஆய்வளாராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 13.07.2020 தேதி பி.சி.பட்டி வட்ட காவல் ஆய்வளாராக பணியில் இருந்தபொழுது பி.சி.பட்டி காவல் நிலைய குற்ற எண்.658/2020 பிரிவுகள் 147, 148, 341, 294(பி), 323, 332, 324, 307 மற்றும் 506(2) இ.த.ச வழக்கினை பார்வையிட்டு எனது மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கையினை சார்பு ஆய்வாளர்

சரவணன் பதிவு செய்து முதல் புலன் விசாரணையை காவல் ஆய்வாளர் அண்ணமயில் மேற்கொண்டு வழக்கின் எதிரிகள் A3, A4, A5, A6 ஆகியோர்களை கைது செய்து நீதிமன்றத்தில் ஒப்படையத்துள்ளார். மேலும், இவ்வழக்கின் எதிரிகள் A1, A2 தேனி மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்று நீதிமன்றத்தில் சரணடைந்து விசாரணைக்கு ஒத்துழைத்துள்ளார் என்ற விபரம் தெரிந்து கொண்டேன். அன்றைய தினமே சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டேன். நான் தனியாக பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை. மேலும் சாட்சிகளை விசாரணை செய்ததில் ஆய்வாளர் அண்ணமயில் அவர்களிடம் கூறியதுபோல் என்னிடம் கூறியததால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. 15.08.2020ம் தேதி இவ்வழக்கில் காயம்பட்ட மகேந்திரன் என்பவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் மோகன பிரியா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததுடன் காயச்சான்றிதழ் பெற்றேன். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் சரவணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு, எனது புலன் விசாரணையை முடித்து எதிரிகள் கொட்டபுலி கலைஞர், ஜக்கப்பன், கருப்புசாமி, காளிராஜ், பாலசந்திரபாபு மற்றும் சித்தநாதன் ஆகியோர்கள் மீது ச/பி.147, 148, 341, 294(பி), 323, 324, 332, 307 மற்றும் 506(2) இ.த.ச.பிரிவுகளிலிருந்து ச/பி.147, 148, 341, 294(பி), 332, 307 மற்றும் 506(2) இ.த.ச சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையுடன் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

நான் தாக்கல் செய்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.த.சா.ஆ.19**.

<u>1 மற்றும் 2 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

பொதுவாக காவலர்கள் ரோந்து பணி செல்லும்பொழுது ஏதும் அசாம்பிதம் ஏதும் நடைப்பெற்றால் அது குறித்து தனி அறிக்கைதான் தாக்கல் செய்ய வேண்டும் என்றால் சரிதான். இவ்வழக்கில் காயம்பட்ட காவலர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்ததால் வாக்குமூலம் பதிவு செய்து வழக்கு பதிவு செய்யப்பட்டது. வழக்கின் சம்பவ நடந்ததாக கூறப்படும் இடம் காவல் நிலையத்திலிருந்து மேற்கு பக்கமா அல்லது கிழக்கு

பக்கமா என்றால் மேற்கு பக்கம். சம்பவ இடத்தில் மறவர் சாவடி முன்பு தேவர் சிலை ஏதேனும் இருந்ததா என்றால் ஞாபகம் இல்லை. வேல்முருகன் சலூன் கடை, தர்மராஜ் டீ கடை, சேகர் டீ கடை, ராமராஜ் வீடு ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். நான் இவ்வழக்கில் மேல்விசாரணையில் சம்பவம் நடந்த மூன்று மாதங்களுக்கு பின்புதான் விசாரணை மேற்கொண்டேன். சம்பவ இடத்தில் விசாரணை மேற்கொண்டதில் யாரும் சாட்சியம் அளிக்க முன் வரவில்லை. அ.த.சா.ஆ.12 விபத்து பதிவேடு அறிக்கையில் காயம்பட்ட நபரின் வேலை பற்றிய இடத்தில் கூலி என எழுதப்பட்டு பின்னர் P.C பேனாவால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் விபத்து பதிவேட்டில் unknown என்பதை un மட்டும் அடிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து பதிவேட்டின் பின்பக்கம் as per surgen opinion என்று குறிப்பிடப்பட்டுள்ளது அந்த சர்ஜன் மருத்துவர் யார் என்று நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய விசாரணையில் சார்பு ஆய்வாளர் சரவணன் என்பவர் வழக்கு கோப்பினை விசாரணைக்காக அண்ணமயில் என்பவரிடம் ஒப்படைத்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். காவல் ஆய்வாளர் என்று குறிப்பிட்டுள்ளார். அ.த.சா.ஆ.19ல் எதனடிப்படையில் சட்டப் பிரிவு மாறுத்தல் செய்யப்பட்டது என்று குறிப்பிட்டு காரணத்தை தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். சட்டப்பிரிவுகள் 323, 324 இ.த.ச ஆகியவைகள் பொது ஊழியர்களை தாக்கி சிறிய காயத்தை ஏற்படுத்தும்பொழுது பதிவு செய்யப்படும் பிரிவாகும். என்னுடைய விசாரணையில் மருத்துவர் அ.சா.1க்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்றும் அது சிராயப்பு காயம் என்றும் கூறியுள்ளார் என்றால் சரிதான். அ.சா.1க்கு வெட்டு காயம் ஏற்பட்டதாகவோ கிழிந்த காயம் ஏற்பட்டதாகவோ கூறவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகள் யாரையும் மறு விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் ஏற்கனவே பதிவு செய்து வைத்திருந்த புகாருக்கு ஏற்ப சட்ட மாறுதல் அறிக்கை தயார் செய்து சாட்சிகளை சரி வர புலன் விசாரணை செய்யாமலும் வழக்கு ஆவணங்கள் அனைத்து

காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்த நிலையில் எவ்வித முகாந்திரமும் இன்றி எதிரிகளுக்கு எதிராக இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

3, 4, 5, 6 எதிரிகள் 1, 2 எதிரிகளின் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்கள்.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் : 01.10 பி.ப

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2025.07.04 18:54:31 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date:04.07.2025